# இளஞ்சுடர்

சிந்திப்போம் செயல்படுவோம் - சிகரம் தொடுவோம்

சுடர் : 1 ஜனவரி 2016 ஒளி : 4

காலாண்டிதழ்



14.03.1891 - 06.12.1956

தமிழ்த்துறை (அரசுநிதி பிரிவு)

**ஸ்ரீ ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)**

**உடுமலைப்பேட்டை**

Scanned by CamScanner











# இளஞ்சுடர்

சிந்திப்போம் - செயல்படுவோம் - சிகரம் தொடுவோம்

சுடர் : 1 ஒளி : 4

காலாண்டிதழ் ஜனவரி 2016



தமிழ்த்துறை (அரசுநிதி பிரிவு)

**ஸ்ரீ ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)**

உடுமலைப்பேட்டை



Scanned by CamScanner

## உள்ளே...


| | | |
|---|---|---|
| ஆசிரியர் உரை | - | 3 |
| தமிழ் அறிவோம் | - | 4 |
| என் நட்பின் நினைவுகளைத் தேடி | - | 5 |
| நட்பின் வெற்றி | - | 6 |
| பூமித் தாயே | - | 8 |
| நான் பெற்ற வரம் | - | 9 |
| நம்பிக்கை | - | 11 |
| தாய் | - | 12 |
| தோழி | - | 12 |
| மாணவன் | - | 13 |
| அற்புத மனிதர் -காமராசர் | - | 14 |
| அன்றாட வாழ்க்கையில் திருக்குறள் | - | 15 |
| ஒத்ததறிவான் உயிர் வாழ்வான் | - | 18 |
| தமிழ்த்துறை மேம்பாடுகள் | - | 22 |






### ஆசிரியர் உரை

இளஞ்சுடர் இதழின் நான்காவது படைப்பு இது. இவ்விதழ் டாக்டர் அம்பேத்காரின் நினைவு நாளை ஒட்டி டாக்டர் அம்பேத்கார் சிறப்பிதழாக வெளிவருகின்றது. பாபா சாகேப் என்று அழைக்கப்படும் முனைவர் பீமராவ் ராம்ஜி அம்பேத்கார் இந்திய விடுதலைக்குப்பின்னர் நாட்டின் முதலாவது சட்ட அமைச்சர். உயர்கல்வி பெறுவதற்காக அமெரிக்கா சென்ற முதல் இந்தியர். பரோடா மன்னருடன் இணைந்து தீண்டாமை ஒழியப் போராடினார். இந்தியாவின் மிகச் சிறந்த உயரிய விருதான பாரத ரத்னா 1990 இல் இவருக்கு வழங்கப்பட்டது. மிகச் சிறந்த சமூக நீதிப் போராளியாகத் திகழ்ந்தவர். அம்பேத்கார் கூறிய கருத்துகளின் அடிப்படையில் 1934 ஆம் ஆண்டு இந்திய ரிசர்வ் வங்கி தோற்றுவிக்கப்பட்டது. நாம் அனைவரும் இத்தகு மாமனிதன் போன்று தன்னலம் மறந்து சமூகத்தின் நன்மைக்காக பொதுநலனுக்காக - வாழப்பழக வேண்டும்.



முனைவர் ப.தமிழ்ப்பாவை
தமிழ்த்துறைத் தலைவர்



Scanned by CamScanner

# தமிழ் அறிவோம்...

**தமிழ் எண்கள்**

1 - க
2 - உ
3 - ங
4 - ச
5 - ரு
6 - சா
7 - எ
8 - அ
9 - க
10 - க0
ா - 100
த - 1000
யத - 10000
ா - 1,00,000
யாத - 10,00000
ா ாத - 1,00,000,00

(நன்றி : இலக்கணச் சுருக்கம்)

**தமிழ் மாதங்கள்**

| | | |
|---|---|---|
| மேழம் | - | சித்திரை |
| விடை | - | வைகாசி |
| ஆடவை | - | ஆனி |
| கடகம் | - | ஆடி |
| மடங்கல் | - | ஆவணி |
| கன்னி | - | புரட்டாசி |
| துலை | - | ஐப்பசி |
| நளி | - | கார்த்திகை |
| சிலை | - | மார்கழி |
| சுறவம் | - | தை |
| கும்பம் | - | மாசி |
| மீனம் | - | பங்குனி |

**தமிழ் எண்தோற்றமும் வளர்ச்சியும்**

| கல்வெட்டுகளில் உள்ள வளர்ச்சி | இன்று உள்ளவை |
|---|---|
| – | 0 – 0 0 |
| [illegible] | க – க 1 |
| [illegible] | உ – உ 2 |
| [illegible] | ங – ங 3 |
| [illegible] | ச – ச 4 |
| [illegible] | ரு – ரு 5 |
| [illegible] | சா – சா 6 |
| [illegible] | எ – எ 7 |
| [illegible] | அ – அ 8 |
| [illegible] | கூ – கூ 9 |

- முனைவர். ப.தமிழ்ப்பாவை





# என் நட்பின் நினைவுகளைத் தேடி...

- சீ.நந்தினி,
இரண்டாம் ஆண்டு கணிதவியல்



உயிருக்கு உயிரான
தோழிகள்
ஒவ்வொருவராக
என்னை விட்டுப்
பிரிகையில் தான் உணர்கிறேன்
மரண வலியை

அவர்கள் என்னுடன்
இல்லா விட்டாலும்
பழகிய நினைவுகளுடன்
நான் வாழ்ந்து கொண்டுதான்
இருக்கிறேன்.

அவர்கள்
தொலைவில் இருந்தாலும்
அவர்களுடன் இருந்த
தொலையாத நிமிடங்கள்
இன்னும் நீண்டு கொண்டே
இருக்கிறது.

வானமும் எங்கள் நட்பும் ஒன்று
தொடும் தூரத்தில்
இல்லை என்றாலும்
தொலைவில் இருந்து உணரலாம்.

என்னைப் பிரிந்தாலும்
மறந்தாலும் மரணம் வரை
அவர்களோடு இருந்த
நாட்களையே நாள்தோறும்
நினைத்துக் கொண்டிருப்பேன்

இன்னும் சேகரிக்க
ஆசைப்படுகிறேன்.
என் உயிரினும்
மேலான தோழிகளின்
இனிமையான
ஞாபகங்களை.

இன்னும் என்
பயணம் தொடர்கிறது
என் நட்பின் நினைவுகளைத் தேடி....



Scanned by CamScanner

# நட்பின் வெற்றி

- சௌ. தேன்மொழி,
இரண்டாம் ஆண்டு வரலாறு



நீ வெற்றி காணும் போது
இது என்னுடைய வெற்றியல்ல
நம்முடைய வெற்றி என்றாயே !
இதுதான் நட்பின் வெற்றி ....

நம்பிக்கை என்னும் நட்பையும்
தன்னம்பிக்கை என்னும் உறவையும்
பகிர்தல் என்னும் அன்பையும்
முயற்சி என்னும் முதல்படியைக் கொண்டு தொட
மனவலிமை போல்
உன் நட்பு வேண்டும்

நண்பன் நட்பைப் பாதுகாக்க வேண்டாம்
உண்மையான நட்பு நண்பனைப் பாதுகாக்கும்...

நண்பன் நட்பைப் பாதுகாத்தால் தான்
உண்மையான நட்பு நண்பனைப் பாதுகாக்கும்....

இகழ்ச்சியைப் புகழ்ச்சியாக்க முடியும்
மகிழ்ச்சிபோல் உன் நட்பு இருந்தால் ....

சோதனைகளையும் சாதனையாக்கு
முடியும் என்ற வெற்றிபோல்
உன் நட்பு இருந்தால்....





ஆசிரியருக்கும் மாணவருக்கும்
உள்ள இடைவெளியை
நிரப்பும் ஒரு உன்னதமான
உறவு தான் நட்பு....

நட்பு ஆணவம் என்னும்
அகங்காரத்தை அழிக்கும்
ஆயுதமாக இருந்தாலே
நட்பு சிறக்கும்...

நட்பு என்னும் மூன்றெழுத்தில்
தொடங்கி பிரிவு என்னும்
மூன்றெழுத்தில் முடிவது நட்பல்ல
என்றும் தோன்றிக் கொண்டே
இருக்கும் வினா என்னும்
மூன்றெழுத்துதான் நம் நட்பு...

கவிதை தோன்றினால்
மன அமைதி கிடைக்கும்
நட்பு தோன்றினால்
மன நிம்மதி கிடைக்கும்...

கவிதைக்கு என்றும் முடிவில்லை
நட்பிற்கும் என்றும் முடிவில்லை
இந்த இரண்டையும் வாழ்க்கையாக
கொண்டுள்ள மனிதனுக்கு முடிவுண்டு.

நட்பும் கவிதையும்
என்றும நிலைக்கும்
வரலாற்றுக்கு ஈடாகும் ஒரு
முடிவில்லா தொடர்கதை...
நட்பு பகிர்தல் மட்டுமல்ல..
புரிதலும் இருந்தால் தான்
நட்பின் ஆழம் நண்பனுக்குப் புரியும்

தவறான பாதையில் செல்வது
நட்பல்ல... சரியான
பாதையை அறிமுகப்படுத்துவது
தான் நட்பு...



Scanned by CamScanner

# பூமித் தாயே

- நா.சரண்யா,
முதலாம் ஆண்டு கணினித்துறை
பி பிரிவு

பூமித்தாயே !
நீ இறைவன் கொடுத்த வரப்பிரசாதம்
நீ ஆனந்தப்படும் ஒவ்வொரு நொடிகளும் ஏற்படும் மாற்றங்கள்
நீ கோபப்படும் ஒவ்வொரு வினாடிகளும் மக்களுக்கு விளையும் ஆபத்து
நீ ஆவேசம் அடையும் போது வெடிக்கும் எரிமலைகள்
நீ அழுகையில் பொங்கினால் சுனாமி
இப்பொழுது
நீ எதைக்கண்டு வருத்தப்படுகிறாய்
மக்கள் தெரிந்து செய்யும் தவறுகளையா ?
அல்லது
தெரியாமல் செய்யும் தவறுகளையா ?
இப்பொழுது தான் ஒரு சிலர் அதை உணருகின்றனர்



சிலர் மரங்களை நடுகின்றனர்
சிலர் உன் மீது உள்ள வெப்பத்தை மழைநீர் சேமிப்பில் அணைக்கின்றனர்
சிலர் உன்னிடம் ஏற்பட்டுள்ள மாற்றங்களை உணர்கின்றனர்
நடைமுறையில் கொண்டு வர முயற்சி செய்கின்றனர்
இனி நீ மன அமைதி கொள் மனமலர்ந்து இரு !
உனக்கு எங்களால் இனி துன்பமில்லை !





# நான் பெற்ற வரம்

- து.நித்யா.
முதலாம் ஆண்டு ஆங்கிலம்

ஒரு நாள் கடவுள் என்னிடம்
நீ உன் வாழ்வில் எதைச் சாபம் என்று நினைக்கிறாய்
எதை வரம் என்று நினைக்கிறாய் என்றார்.
என் வாழ்வில் நான் பட்ட மகிழ்ச்சிகளையும்
துயரங்களையும் சொல்லி அழயாரும் இல்லாமல், என்
உடன் இருந்தவர்கள் என்னைப் புரிந்து கொள்ளாமல்
நான் வாழ்ந்த ஒவ்வொரு நொடியையும்
நான் பெற்ற சாபமென்பேன்.
பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்து இந்த நிமிடம் வரை
என்னை கண்ணுக்குள் வைத்துப் பார்த்தால்
கண்சிமிட்டும் போது எனக்கு வலிக்குமோ என்று எண்ணி
என்னை உயிருக்குள் வைத்துப் பார்க்கும் என் தாயையும்
அழகான அன்புகாட்டி பணிவான பண்பு காட்டி
ஆசையாய் அமுதூட்டி செல்லமாய் என்னைச் சீராட்டி
வளர்த்த என் தந்தையையும்
அழகு  மழலை மொழி பேசி சின்னச் சின்னக் கதை சொல்லி
செல்ல சிறந்த வழிகாட்டி உன் கண்ணில் நீர் வழிந்தால்
என் நெஞ்சில் உதிரம் சொட்டுதடி என்று உரைத்து
என் கண் அசைவுகளையும் கூட புரிந்து கொள்ளும் என் அத்தையும்
அன்புக்கு தாயைத் தொட்டு, பண்புக்கு தந்தைதொட்டு
நேசத்திற்கு சினேகிதி தொட்டு, நான் அழும் நேரம்
கண்ணீர் துடைத்து அறிவும், அடக்கமும் கனிவும்
ஒருங்கிணைந்த, கடவுளாய் இருக்கும் என் ஆசிரியரையும்...
இன்று நேற்று நாளை என்று கூறாமல் என்றும்
நான் உன்பக்கத்தில் நீ என் தோள் சாய் என்று கூறிய என் தோழிகளும்...



Scanned by CamScanner

சிறு சிறு தொல்லைகள் செய்து நான் சீறும் போது
கொஞ்சி விளையாண்ட பாசம் என்னும் கடலின்
நான் நீந்திச் செல்ல படகாய் இருக்கும் என்
இனிய சகோதரனும்....
நான் அழகு வண்ணப் பட்டுப் பூச்சியாய் சிறகடித்து
பறந்த என் பள்ளிப் பருவமும், என் தாயின்
கருவறைக்கு ஈடாய் என்னைப் பாதுகாத்த
என் பள்ளியும்...
நான் என் வாழ்வில் பெற்ற
சிறந்த
பெரிய
அரிய
இனிய
அழகிய  வரம் என்பேன் இறைவா !







# நம்பிக்கை

- ம.புஷ்ப நந்தினி.
முதலாம் ஆண்டு கணிதம்

நண்பனே !
சிறகசைப்பது சிரமமென்றால்
பறவைகள் பறப்பதெப்படி ... ?
பட்டை தீட்ட தீட்டத்தான்
வைரம் ஜொலிக்கும்
கல்லை செதுக்க செதுக்கத்தான்
அழகிய சிற்பம் உருவாகும்
நிலத்தைத் தோண்ட தோண்டத்தான்
நீரும் கூட சுரக்கும்... அதனால்
எந்த ஒரு முயற்சியையும்
உயர்வாக வைத்து
நம்பிக்கையோடு நீ செயல்பட்டால்
நாளைய விடியலுக்கான வெளிச்சம்
உனக்குள்ளே ஒளிவீசும் ... !
எழுந்து வா... தோழா .... !
மனத்தில் நம்பிக்கை இருந்தால்
மலையை வெல்லலாம்
செயலில் நம்பிக்கை இருந்தால்
செருக்கை வெல்லலாம்
உள்ளத்தில் நம்பிக்கை இருந்தால்
உலகையே  வெல்லலாம் :
சரித்திரத்தில்    இடம்பெறப் போகும்
சரித்திர நாயகன் நீ
சங்கடங்களைத் தூக்கி எறிந்துவிட்டு
சாதனைகள் படைக்க எழுந்து வா.... !
வானமே உன் எல்லையாகட்டும்
விண்மீன்கள் உன் புகழ்பாடட்டும்.... !





Scanned by CamScanner

# தாய்

- *ம.புஷ்ப நந்தினி,*
முதல் ஆண்டு கணிதம்

வீட்டு வாசலில்
பள்ளிப் பேருந்திலிருந்து
நான் பையைச் சுமந்து கொண்டு
படிக்கட்டில் இறங்கும் முன்
பாசத்தோடு ஓடிவந்து
பையைக் கொடும்மா
என்று பாசமாக
வாங்கிச் சுமந்தாய்... !
கொஞ்ச நேரம் நான்
சுமப்பதைக் கூட
தாங்காத என் தாயே
என்னைப் பத்து மாதம்
இறக்காமல் சுமந்து
எப்படிப் பெற்றாய் !
உன் பாதத்தைக் காட்டு
நான் பூஜிக்க காத்திருக்கிறேன்....



# தோழி

- *ம.விஜயநந்தினி,*
முதல் ஆண்டு கணிதம்

தோழியே ! நீ என் சுவாசம்
நான் சுவாசிக்கும் காற்று உன் நட்பு
காதலே தெரியாத எனக்கு
காதலைப் புரியவைத்தது உன் நட்பு
உயிரில்லாமல் வாழ்ந்த எனக்கு
உயிர் கொடுத்தது உன் நட்பு
தோழியே !
உன் கோபம் என் லாபம்
நான் வீசும் அம்பு உன் அன்பு
என் பூவின் சுவாசம் உன் நேசம்
எனக்குப் பைத்தியம் பிடித்தது உன் நட்பால்
நீ சென்ற பின்பும் வழி
தெரியவில்லை ஏனென்றால்
என்னுள் உறைந்திருக்கிறது உன் உயிர்
ஓர் உயிராய் பயணிக்கிறோம்....
மீண்டும் பிறப்பெடுப்பேன்
நான் உன் தோழியாய் !







# மாணவன்

- *ம.விஜயநந்தினி,*
முதல் ஆண்டு கணிதம்

மாணவனே !
நீயோ ஓர் உயிர் ஆனால்
உன்னை நம்பியிருக்கிறது பல உயிர்
நீ நம் நாட்டின் தூணாய் பிறப்பெடுத்துள்ளாய்
உனக்கு மாணவன் என்று மகுடம் சூட்டியது ஏனென்றால்
நீ ஜொலிக்கும் நட்சத்திரம் !
சாதிக்கும் புயல் !
மாணவனே !
உன் வெற்றியைக் கண்டு நடுங்குகிறது
நீ கொள்ளும் சவால் ! எனவே சகலகலா வல்லவன் நீ
தோல்வியே உன் தோழன்
சாதிக்கும் புயலே ! வெற்றியின் மறுஉருவம் நீ !
காதலின் கவிஞன் நீ ! இந்தியாவின் மாற்றம் நீ !
உன் முழக்கம் பகைவனின் கலக்கம்.
மாணவனே !
அனைத்துத் தீமைகளையும் தகர்த்திடவே
உன்னைக் கண்டோம்
ராஜாவையே ஆளும் ராஜாதி ராஜனே
மூடர்களுக்கு பதம் தீட்ட எழுந்து வா !
இயற்கையை அழியாமல் காக்கும்
ஓர் அழகிய தமிழ் மகனாய் எழுந்து வா !
உலகம் உன் புகழ்போற்றிட எழுந்து வா !
ஒரு வெற்றிப் புயலாய் !





Scanned by CamScanner

# அற்புத மனிதர் – காமராசர்



- ர.மீ.அனுவர்ஷினி,
முதலாம் ஆண்டு கணிதம்

சேவைக்கு ஒரு தலைவன்
சிவகாமி பெற்ற மகன்
தாலசைப்பின் விரலசைப்பில்
நாடசைய நாம் கண்டோம் !
ஈரெட்டுப் பருவத்தில்
இல்லத்தார் நீர்மல்க
நாட்டின் விடுதலைக்கே
பணித்திட்டார் வாழ்வதனை
வடபுலத்தில் ஓர் காந்தி
வங்கத்தில் ஓர் சிங்கம்
இடரேற்றார் போரிட்டார்
இருமுகாமில் களமமைத்தார்
காந்திவழி நம் தலைவர்
கண்ணீரில் விவசாயம் வளர்த்தார்
மாந்தர்தம் விலங்கொடிக்க
மரணமும் துச்சமென்றார்
நாலெட்டு ஆண்டுகாலம்
நாடெல்லாம் சுற்றி வந்தார்
போரிட்டார் ! சிறை புகுந்தார்
புல்லரின்கை அடிபட்டார்
விடுதலை பெற்றிட்டோம்
விலையில்லா காந்திமகான்
சுடுபட்டார் கொடியவனால்
சோகத்தில் மூழ்கிட்டோம்
இந்தியாவின் சுதந்திரம்
எழிலுடன் திகழ்வதற்கே
விந்தியத்தின் தென்மைந்தன்
வீரமுடன் புறப்பட்டார்.
நேருவுடன் கரங்கோர்த்து
நெடும்பயணம் தொடங்கிட்டார்.

பாரத நற் திருநாட்டை
பார்புகழ செய்திட்டார்
படிப்பில்லை பட்டமில்லை
பல்கலையின் வித்தகரை
நொடிப்போதில் உணர்வூட்டும்
நுண்ணறிவைப் போதித்தார்
கற்றதெல்லாம் தாய்நாடு
கண்டதெல்லாம் தமிழ்மக்கள்
பதவிமேல் நாட்டமில்லை
பணமீட்ட எண்ணமில்லை
உதவிடவே ஓடிடுவார்
உத்தமராம் நம் தலைவர் !
ஏழைகளின் பிள்ளைகளை
இலவசமாய் படிப்பித்தார்
கதியற்ற குழந்தைகளின்
கல்வியுடன் சீருடையும்
மதியத்தில் உணவளித்தும்
மறுவாழ்வு கொடுத்தார்.
இல்லறத்தின் சுவையறியார்
ஏந்திழையின் துணையறியார்
நல்லறத்தன் நாயகனாய்
நாளெல்லாம் வாழ்ந்திட்டார் !
கைகளில் பணமில்லை
கடுகளவு நிலமில்லை
தெய்வத்தை வழிபடுவோம்
தீவினைகள் அகலுவதற்கே
உய்யும் வழி காட்டிய
உத்தமனை வணங்கிடுவோம்
உலகோர் போற்றிடவே
கர்மவீரர் வாழியவே... !







# அன்றாட வாழ்க்கைக்குத் திருக்குறள்

- சீ.நந்தினி
முதல் ஆண்டு கணிதம்

**முன்னுரை :**

திருக்குறள் (திரு+குறள்) சிறந்த குறள் வெண்பாக்களினால் ஆகிய நூல் ஆதலின் இப்பெயர் பெற்றது.

குறள் - இரண்டடி வெண்பா. திரு - சிறப்பு அடைமொழி

இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டது.

**அறத்துப்பால் :**

பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என பகுக்கப்பெற்று 38 அதிகாரங்களை உடையது.

**பொருட்பால் :**

அரசியல், அங்கவியல், ஒழியியல் எனப் பகுக்கப்பெற்று 70 அதிகாரங்களை உடையது.

**காமத்துப்பால் :**

களவியல், கற்பியல் எனப் பகுக்கப்பெற்று 25 அதிகாரங்களைக் கொண்டிலங்குகின்றது.

**திருக்குறளின் சிறப்பு :**

திருக்குறள் உலகப் பொது நூல், அறவிலக்கியம், தமிழர் திருமறை என்றெல்லாம் போற்றப்படுகின்றது."ஆலும் வேலும், பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி ", பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில் என்னும் பழமொழிகள் இதன் பெருமையை விளக்குவனவாகும்.

**செய்ந்நன்றியறிதல் :**

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று

ஒருவர் செய்த உதவியை மறப்பது நல்லதன்று. அவர் செய்த தீமையை அன்றே மறப்பது நன்று என்று வள்ளுவர் பிறர் செய்த நன்றியை மறவாதே என்று உலகிற்கு எடுத்துரைக்கிறார்.



Scanned by CamScanner

**பொறையுடைமை :**

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை

தம்மைத் தோண்டுபவரையும் தாங்கிக் கொள்ளும் நிலத்தைப் போல, தம்மை இகழ்பவரையும் பொறுத்துக் கொள்ளுதல் சிறந்த அறமாகும். இக்குறளில் பிறர் செய்யும் தீங்கை பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று உலகிற்கு எடுத்துரைக்கிறது.

**அறிவுடைமை :**

அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்

அறிவுடையார் எதிர்காலத்தில் நிகழப் போவதை முன்பே அறிந்து காக்க வல்லவர். ஆனால் அறிவிலார் அதனை அவ்வாறு அறிய முடியாதார்.

**வினைத்திட்பம் :**

உருவுகண் டெள்ளாமை வேண்டும். உருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னார் உடைத்து.

உருண்டு செல்லும் பெரிய தேரின் சிறிய அச்சாணி போன்றோரும் உள்ர். எனவே எவரையும் அவரின் உருவம் கண்டு இகழக்கூடாது என்கிறது திருக்குறள்.

**அடக்கமுடைமை :**

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு

தீயினால் சுட்ட புண் ஆறிவிடும். ஆனால் பிறரை நாவினால் சுட்ட புண் என்றென்றும ஆறாத வடுவாய் வருத்தும் என்கிறது திருக்குறள்.

**வாய்மை :**

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று

பொய் சொல்வதற்கு பதிலாக நன்மையாகிய அறங்களை செய்யாமல் இருப்பதே நன்று. வாய்மையே வெல்லும் என்கின்றது திருக்குறள்.





**நட்பு :**

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு

முகம் பார்த்து வருவதல்ல நட்பு : அகம் பார்த்து வருவதே உண்மையான நட்பு.

**முடிவுரை :**

உத்தர வேதம், தெய்வ நூல், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ்மறை, பொது மறை என்றெல்லாம் திருக்குறள் போற்றப்படுகிறது. இவ்வாறெல்லாம் போற்றப்படும் திருக்குறள் நம் வாழ்க்கையை நல்வழியில் கொண்டு செல்வதற்கு என்றென்றும் துணையாக நிற்கும். இத்துணை சிறப்புமிக்க திருக்குறளைக் கற்று நாம் நம் வாழ்வை வளமுடையதாக்குவோம்.

என்றும் புலரா தியாணர்நாட் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதாய்க் - குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர்போன்ம்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல்

- இறையனார்.



Scanned by CamScanner

# ஒத்ததறிவான் உயிர் வாழ்வான்

*- சௌ.தேன்மொழி*
இரண்டாம் ஆண்டு வரலாறு

முன்னுரை :

ஒத்ததறிவான் உயிர்வாழ்வான் மற்றையன்
செத்தாருள் வைக்கப்டும்.

உலகத்திற்கு ஏற்றாற்போல பிறருக்கு உதவி செய்து வாழ்பவனே இவ்வுலகில் வாழத் தகுதியுடையவன் ஆவான். மற்றவர்கள் (உதவி செய்யாதவர்கள்) அனைவரும் செத்தாருள் வைக்கப்படுவர். இன்றைய சமூகத்தில் மக்கள் வேலைப் பளு காரணமாக மற்றவர்களுக்கு உதவுவதை நினைப்பதற்குக் கூட நேரமில்லாமல் வாழ்கின்றனர்.

மனித நேயம் என்பதையே மறந்துவிட்டனர் மக்கள். இந்த நிலையில் உதவி கேட்பவர்கள் கேட்டுக் கொண்டு தான் இருக்கின்றனர்.ஆனால் இங்கு உதவுவதற்கு எவருமில்லை. உயர்ந்தவர்கள் மேலும் உயர்ந்து கொண்டுதான் இருக்கின்றனர். தாழ்ந்தவர்கள் தாழ்ந்து கொண்டு தான் இருக்கின்றனர். இதில் உதவி என்ற ஒன்று இடம் பெறுவதேயில்லை.

பழைய காலகட்டங்களில் உதவி என்று வருபவருக்கு இல்லை என்ற வார்த்தையை எவரும் தெரிவிக்கமாட்டார்கள்.

ஆனால் இன்றோ இல்லை என்ற வார்த்தையைத் தவிர வேறு எதுவும் உரைப்பதே இல்லை.

கைம்மாறு எதிர்பாராமல் உதவும் உதவி :

ஆபத்தில் உதவுபவனே உண்மையான நண்பன் ஆவான். ஆபத்து காலங்களில் எந்த ஒரு எதிர்பார்ப்பும் இல்லாமல் செய்யும் உதவி கடலை விடவும் உலகத்தை விடவும் பெரிதாகும்.

ஒன்றைப் பிறரிடமிருந்து எதிர்பார்த்து செய்வது சிறந்த உதவியாகாது.

எந்த ஒரு எதிர்பார்ப்பும் இல்லாமல் உதவி செய்பவர்களே சிறப்பு பெற்ற சான்றோர்கள் ஆவார்கள்.

பயனை எதிர்பாராமல் செய்யும் உதவி பயனில்லா உதவி அல்ல ; பல்லாண்டு காலம் நீடித்து நிற்கும் உதவியாகும்.





ஒருவருக்கு உதவி செய்தவர்கள் இன்ன உதவி அவருக்கு செய்தேன் என சுட்டிக் காட்டி உதவியை விமர்சிப்பது சிறந்த உதவியாகாது.

அவசியமான நேரத்தில் அவசரமாக அவர்களுக்கு செய்யும் உதவி அம்சமான உதவியேயாகும்.

ஆனால் அப்படிப்பட்ட உதவி இன்றைய சமுதாயத்தில் எவரும் செய்ய முன்வருவதில்லை. இப்படிப்பட்ட காலகட்டத்தில் மற்ற இனத்திற்கும் உதவி செய்கின்றன. பிறந்த ஒரு நாய்க்குட்டியின் அம்மா இறந்தவுடன் ஒரு ஆட்டுக்குட்டி அந்த நாய்க்குட்டிக்கு பாலூட்டிய நிகழ்ச்சி இதுவல்லவா உதவி செய்யும் பண்பும் மனித நேயமும் ஆகும்.

ஆனால் மனிதர்கள் விபத்தில் யார் அடிபட்டு கிடந்தாலும் பார்த்துக் கொண்டு தான் நிற்கின்றனர்.

உதவி என்ற ஒன்று
உதவுபவர்கள் இல்லாததால்
உதவாமலே போய்விடுகிறது.

இந்த நிலை உருவாவதற்கு தனி மனிதன் மட்டும் காரணமல்ல இந்த சமுதாயமே ஒரு காரணமாகும்.

**விருந்தினரும் வறியவரும் நெருங்கி உண்டல் :-**

விருந்தினரும் வறியவரும் நெருங்கி உண்பதைக் கண்டவர் முகம் மலர்தலால் அவர்கள் சான்றோர்களில் ஒருவராகக் கருதப்படுவார்.

அது போலவே போரில் இறந்த வீரர் தம் உடல் பருந்தினங்களுக்கும் கழுகுக்கும் இரையாவதை நினைத்து முக மலர்ந்து கிடக்கின்றனர்.

இயற்கை எப்பொழுதும் உதவி எதிர்பார்த்து உதவுவதில்லை.

இயற்கை இன்பம் தரும்
இன்னிசை இயற்கை மீறினால்
துன்பம் தரும் துஷ்டனாக
இயற்கை கூட செயற்கையாக மாறும்



Scanned by CamScanner

இயற்கையோ எந்த எதிர்பார்ப்பும் இன்றி உதவுவது போல மனிதர்களும் எதிர்பார்ப்பின்றி உதவி செய்து வாழ்வதே நன்றாகும்.

எப்படிப்பட்ட செல்வத்தைச் சேர்த்திருந்தாலும்

உரிய நேரத்தில் உரியவருக்கு
உதவுவதே உரிய
உதவியாகவே ஆகும்.
உரிய நேரத்தில் உதவும்
உதவி உயிருள்ளவரை
உள்ளத்தில் வாழும் உயிருள்ள
உதவியாகும்.

**பிறருக்கு உதவி செய்து வாழ்தல் :**

பிறருக்கு உதவி செய்து வாழும் வாழ்க்கை சாதனை படைத்த வாழ்க்கையாகும்.

சாதனைகள் அடைய
உதவி செய்து சோதனையும்
வேதனையும் விலக்கி வெற்றி
பெறுவதே சாதனை உதவியாகும்.

பிறருக்கு உதவி செய்வதும் ஒரு சிறந்த வெற்றிக் கனியாகும். அந்தக் கனியை அனைவரும் உதவி செய்து பெற்று வாழும் இன்பம் மிகவும் முக்கியமான இன்பமான செயலாகும்.

இன்றைய நட்பு மனம்
உள்ளிருந்து உதவுவதல்ல
பணம் உள்ளிருக்கும் வரை உதவுவதேயாகும்.

பிறர்க்கு உதவி செய்யும் மனம் கொண்டவர்களின் பணம் இயற்கை போன்றதாகும். என்றும் உதவுவதேயாகும்.

உதவுபவர்களால் பணமும் மனமும் கூட
ஒரு பொதுவுடைமையே

விருந்தினரும் வறியவரும் நெருங்கியுண்ண
மேன் மேலும் முகமலரும் மேலோர் போலப்





பருந்தினமும் கழுகினமும் தாமே யுண்ணப்
பதுமமுகம் மலர்ந்தாரைப் பார்மின் பார்மின்

முடிவுரை :

ஒத்ததறிவான் மற்றவர்களுக்கு உதவி செய்து வாழ்பவனே உயிர்வாழத் தகுதியுடையவன் ஆவான். மற்றவர்கள் செத்தவர்களுள் வைக்கப்படுவர். இது பற்றிய கருத்துக்கள் நீதி நூலில் பொதுவுடைமை கருத்துக்களாக கூறப்பட்டுள்ளன.



Scanned by CamScanner

## தமிழ்த்துறை மேம்பாடுகள்

### முனைவர் ப.தமிழ்ப்பாவை

| | தலைப்பு | பன்னாட்டுத்தர நூல் எண் | அமைப்பு | நாள், இடம் |
|---|---|---|---|---|
| 1. | படகர் வாழ்வியல் உரைக்கும் குறிஞ்சித்தேன் | 978-930633-0-09 | அனைத்துலக ஆய்வு மாநாடு. | 11.07.2015 கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி |
| 2. | பதிற்றுப்பத்தில் நகைச்சுவை | 978-81-925671-5-0 | தேசிய கருத்தரங்கம் | 28.07.2015 ஸ்ரீ ஜி.வி.ஜி விசாலாட்சி மகளிர் கல்லூரி உடுமலை |
| 3. | ஒருநிமிடக்கதை உணர்த்தும் பெண்ணியச் சிந்தனை | 978-93-81006-98-6 | பன்னாட்டுக் கருத்தரங்கம் | 21.09.2015 இந்துக் கல்லூரி சென்னை. |
| 4. | ஊடகங்களில் தமிழ் உண்மை நிலை | 0973.0303 (ISSN No.) | பன்னாட்டுக் கருத்தரங்கம் | 22.09.2015 ஜமால் முகம்மது கல்லூரி திருச்சி |

### முனைவர் வி.வசுமதி

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | அவரும் அவளும் | 978-930633-0-09 | அனைத்துலக ஆய்வு மாநாடு. | 11.07.2015 கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி |
| 2. | உடுமலையாரின் இலக்கியங்கள் வழி என்.எஸ்.கிருஷ்ணன் நகைச்சுவை | 978-81-925671-50 | தேசிய கருத்தரங்கம் | 28.07.2015 ஸ்ரீ ஜி.வி.ஜி விசாலாட்சி மகளிர் கல்லூரி உடுமலை |
| 3. | கற்பகக் காற்று | 978-93-81006-98-6 | பன்னாட்டுக் கருத்தரங்கம் | 21.09.2015 இந்துக் கல்லூரி சென்னை. |
| 4. | ஊடகங்களில் நாடகங்கள் | 0973.0303 (ISSN No.) | பன்னாட்டுக் கருத்தரங்கம் | 22.09.2015 ஜமால்முகம்மது கல்லூரி, திருச்சி |





### முனைவர். வே.செழிப்பவுன்

| | தலைப்பு | பன்னாட்டுத்தர நூல் எண் | அமைப்பு | நாள், இடம் |
|---|---|---|---|---|
| 1. | குறுந்தொகையில் நகை | 978-81-925671-5-0 | தேசிய கருத்தரங்கம் | 28.07.2015 ஸ்ரீ ஜி.வி.ஜி விசாலாட்சி மகளிர் கல்லூரி உடுமலை |
| 2. | ஆண் மொழியும் பெண் நிலையும் | 978-93-81006-98-6 | பன்னாட்டுக் கருத்தரங்கம் | 21.09.2015 இந்துக் கல்லூரி சென்னை. |
| 3. | பண்பாட்டு மாற்றமும் சமூக வலை தளங்களும் | 0973.0303 (ISSN No.) | பன்னாட்டுக் கருத்தரங்கம் | 22.09.2015 ஜமால்.. முகம்மது கல்லூரி திருச்சி |

### பங்கேற்ற பயிலரங்கு

| தலைப்பு | இடம் | நாள் |
|---|---|---|
| சுவாமி விவேகானந்தர் சிந்தனைகள் | பாரதியார் பல்கலைக் கழகம் | 30.03.2015 |

### சே.மகேஸ்வரி


| | அமைப்பு | தலைப்பு | நாள், இடம் |
|---|---|---|---|
| 1. | எட்டுத் தொகையில் புராண இதிகாசக் கூறுகள் | பரிபாடலில் திருமால் அவதாரங்கள் | 20.21.22.03.2015 காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகம் |
| 2. | தமிழ் இலக்கியத்தில் நகைச்சுவை | சுந்தரர் தேவாரத்தில் நகைச்சுவை | 28.07.2015 ஸ்ரீ ஜி.வி.ஜி விசாலாட்சி மகளிர் கல்லூரி (தன்னாட்சி) உடுமலை |
| 3. | தற்கால இலக்கியத்தில் பெண்ணியச் சிந்தனைகள் | த்ரில் சிறுகதையில் அனுவின் ஆக்கம் | 21.09.2015 இந்துக் கல்லூரி, சென்னை |
| 4. | தமிழ்ச் சமூகம் கலாச்சாரம் - கல்வி வணிகம் - இலக்கியங்களில் தகவல் தொடர்புச் சாதனங்களின் தாக்கமும் மாற்றமும் | வலைதளங்களில் பெண் 0973.0303 (ISSN No.) | 22.09.2015 ஜமால் முகம்மது கல்லூரி திருச்சி |



Scanned by CamScanner

முனைவர். மா.யோ.ஆனந்தி

| | அமைப்பு | தலைப்பு | நாள், இடம் |
|---|---|---|---|
| 1. | அனைத்துலக ஆய்வு மாநாடு திருவையாறு தமிழ் ஐயா கல்விக்கழகம் | கதைக்குள் கதை கூறும் எனக்கும் ஒரு கதை உண்டு | 11.07.2015 கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோவை |
| 2. | தேசியக் கருத்தரங்கம் தமிழ் இலக்கியத்தில் நகைச்சுவை | நகைச்சுவை நிறைந்த வதம் | 28.07.2015 ஸ்ரீ ஜி.வி.ஜி. விசாலாட்சி மகளிர் கல்லூரி, உடுமலை. |
| 3. | பன்னாட்டுக் கருத்தரங்கம் | தற்கால இலக்கியங்களில் மகளிர் சிந்தனை | 21.09.2015, இந்துக் கல்லூரி பட்டாபிராம், சென்னை. |
| 4. | பன்னாட்டுக் கருத்தரங்கம் | திரைப்படங்களில் மொழி மற்றும் பண்பாட்டுச் சிதைவுகள் | 22.09.2015 ஜமால் முகம்மது கல்லூரி திருச்சி |
| 5. | பன்னாட்டுக் கருத்தரங்கம் | எட்டுத் தொகையில் அறிவியல் | 21.11.2015 கற்பகம் பல்கலைக்கழகம் ஈச்சனாரி, கோவை. |


















Scanned by CamScanner






Scanned by CamScanner